பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' – A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 10 (25—7—72) செவ்வாய் — வெளியூர்: ஆடி 11 (26—7—72) புதன் [இதழ்: 35

பதவியிலிருந்து விலகிய மத்திய அமைச்சர் — வழக்குரைஞராகிறார்

புதுடில்லி, ஜூலை 25—

மத்திய அரசில் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்து — தலைமையமைச்சர் கேட்டுக் கொண்டதன்மீது — அண்மையில் பதவியிலிருந்து விலகிய மொய்னுல் ஹக் சௌதுரி, தலைமை நீதிமன்றத்தின் வழக்கறிஞர்கள் சங்கத்தில் தம்முடைய பெயரைப் பதிவு செய்துகொண்டார்.

"இனிமேல் வழக்குரைஞராகப் பணியாற்றுவேன்" என்று அவர் கூறியிருக்கிறார்.

நிலச் சீர்திருத்தப் பணியில் தமிழகம்

மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் நிற்கிறது

'மூன்று திங்களில் முற்றுப்பெற்றுவிடும்' என முதலமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 25—

"தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்சவரம்பு என்பது, வளமான 12 ஏக்கர் நிலத்திற்குச் சமமானது; எனவே, இதை மேலும் குறைக்கவோ அல்லது திருத்தி அமைக்கவோ வேண்டிய அவசியம் இல்லை.

'தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், பல கட்டங்களில் நிறைவேறி — நிறைவு பெறும் நிலையில் இருக்கிறது! அடுத்த மூன்று அல்லது நான்கு மாத காலத்திற்குள் நமது மாநிலத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் இயற்றும் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுவிடும்."

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுச் சென்னை திரும்பியதும் செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் விளக்கிக் கூறினார்; இத்தொடர்பில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் தெரிவித்ததாவது:—

"5 பேருக்கு மேல் உள்ள குடும்பத்திற்கு 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நமது மாநிலத்தில் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருப்பதை 30 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைக்க வகை செய்யச் சட்டம் கொண்டுவர வேண்டும்; இது விரைவில் கொண்டு வரப்படும்; இது இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் வரலாம்.

"தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்குகளை மேலும் ரத்து செய்வது பற்றிய கூட்டுப் பரிசிலனைக் குழுவின் இறுதிக் கூட்டம், ஆகஸ்ட் இறுதியில் குற்றாலத்தில் நடைபெறும்; அதன் அறிக்கை கிடைத்ததும், அடுத்த மாதம் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தில் இதற்கான மசோதா கொண்டுவரப்படும்.

"தமிழ்நாட்டில் குத்தகை உரிமைப் பதிவேட்டு முறை பணிகள், ஆண்டு இறுதிக்குள் முடிந்துவிடும்; குத்தகைதாரர்கட்கு அந்த நிலத்தை உரிமையாக்க — அவர்கள் அந்த நிலத்தை வாங்குவதற்கு நிதியுதவி செய்வதற்காகக் குத்தகைதாரர்கள் நிதியுதவிக் கார்ப்பரேஷன் அமைக்க எண்ணியிருக்கிறோம்; அதற்கு மத்திய அரசு நிதியுதவி செய்யும்படித் தலைமையமைச்சரைச் சந்தித்தபோது கேட்டுக்கொண்டேன்; இதுபற்றி யோசிப்பதாக அவர் சொல்லியிருக்கிறார்.

"குத்தகைதாரர்கள் உரிமைப் பதிவேட்டு முறை பல மாநிலங்களில் நடைபெறவில்லை; அனைத்திந்திய அடிப்படையில் இந்த முயற்சி நடக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேன்.

"தமிழ்நாட்டிற்கு உரம் சப்ளை செய்வதில் — வரத்தில் தாமதம் ஏற்படுகிறது; இந்தத் தாமதத்தைத் தவிர்த்து, விரைவாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படத் தலைமை அமைச்சரிடம் கோரினேன்; ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறார்."

சிம்சன் பிரச்சினை

செய்தியாளர்:—"தலைமையமைச்சரிடம் வேறு என்ன பேசினீர்கள்?"

முதல்வர்:—"சிம்சன் பிரச்சினையைப்பற்றி விளக்கிக் கூறினேன்; தற்போது சுமூகமான சூழ்நிலை நிலவுவதாகவும், விரைவில் நல்ல முடிவு ஏற்படும் என்றும் தலைமையமைச்சரிடம் தெரிவித்திருக்கிறேன்."

கேள்வி:—"சிம்சனை அரசே ஏற்று நடத்தப்போவதாகக் கூறப்படுகிறதே!"

முதல்வர்:—"நான் தலைமையமைச்சரிடம் பேசும்போது, அவருடைய பேச்சிலிருந்து அந்தமாதிரி ஓர் எண்ணம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை."

தென் மண்டலக் குழுவில் பேசும் பொருள்

கேள்வி:—"ஐதராபாத்தில் நடைபெறும் தென் மண்டலக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்கிறீர்களே — என்ன பேசப்போகிறீர்கள்?"

முதல்வர்:—"என்ன பேசுவது என்பதுபற்றி இன்று மாலை விவாதிக்கப்படும்; பொதுவாக, சிறுபான்மையோர் நலன் — மின் கட்டணம் ஆகியவைபற்றிப் பேசப்படலாம்."

தமிழகத்துக்குத் தலைமையமைச்சர் இந்திரா வருகை

"இந்த ஆண்டு செப்டம்பர் 5-ம் நாள் தூத்துக்குடியில் நடைபெறும் வ. உ. சி. சிலைத் திறப்பு விழாவுக்குத் தலைமையமைச்சர் வருவதாகக் கூறியிருக்கிறார்; வருவதுபற்றிப் பின்னர் உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்திருக்கிறார்.

சுதந்தர வெள்ளி விழாவில் ஜெகஜீவன் ராம்

அதுபோன்றே, ஆகஸ்ட் 15-ம் நாள் நடைபெறும் 'விடுதலை நாள்' விழாவிற்கு மத்திய அமைச்சர் ஜெகஜீவன் ராம் வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்; அன்று மாலை நடைபெறும் அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்வார்."

அரசியல் ரீதியாக எதுவும் பேசவில்லை

கேள்வி:—"வேறு என்ன தலைமையமைச்சரிடம் பேசினீர்கள்? இந்திரா காங்கிரசுபற்றி ஏதாவது பேசினீர்களா?"

முதல்வர்:—"அரசியல் ரீதியாக எதுவும் பேசவில்லை; அரசியல் பிரச்சினை எதுவும் பேசவில்லை; தமிழ்நாட்டில் தற்போது சுமூகமான நல்ல சூழ்நிலை இருப்பதாக எடுத்துக் கூறினேன்."

ஆசிரியர்கட்குப் பதவி உயர்வு

இவ்வாண்டு 5,000 பேர் பயன்பெறுவர்

சென்னை, ஜூலை 25—

எல்லா நிர்வாகங்களின் கீழுமுள்ள பள்ளிகளில் ஏற்கனவே இருந்துவரும் 'ஹையர் கிரேடு' ஆசிரியர் பதவிகளை உயர்த்துவதன் மூலம், 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளுக்கு அனுமதி வழங்கித் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது; இது 1972 ஜூன் 1-ந் தேதிமுதல் செயலுக்கு வரும்.

ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகளில் — அதற்குரிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு பணியாற்றிவரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், இதன் மூலம் செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிக்குரிய சம்பளத்தைப் பெறுவார்கள்; 'சீனியாரிட்டி' அடிப்படையில் அவர்கள் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

அடுத்த ஆண்டில் இதே மாதிரி 4,000 ஹையர் கிரேடு பதவிகள் செகண்டரி கிரேடு பதவிகளாக மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் மேற்கூறிய 5,000 செகண்டரி கிரேடு பதவிகளைத் தவிர, புதிதாக 2,200 செகண்டரி கிரேடு பதவிகளும், 1,000 பி.டி. ஆசிரியர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்திரா காங்கிரசு எம். எல். ஏ.-க்களுக்கு நேர்ந்த கதி

இளைஞர் காங்கிரசாரிடம் சிக்கித் திணறல்

மூத்த ஊழியர்களின் முறைகேட்டை எதிர்த்து முற்றுகைப் போர்

பூனா, ஜூலை 25—

மாராட்டிர சட்டமன்றத்தில் கலந்துகொள்வதற்குப் பூனாவிலிருந்து பம்பாய்க்குப் பயணமான இந்திரா காங்கிரசு எம்.எல்.ஏ.-க்கள் மூவரை வழிமறித்து, இளைஞர் காங்கிரசார் முற்றுகைப் போர் நடத்தினார்கள்.

இந்த முற்றுகைப் போர் பூனா இரயில் நிலையத்தில் 70 இளைஞர் காங்கிரசாரால் நடத்தப்பட்டது.

'காங்கிரசில் உள்ள மூத்த ஊழியர்கள் ஒழுங்கில்லாமல் நடந்துகொள்கிறார்கள்" என்ற குற்றச்சாட்டின் மீது இந்த முற்றுகைப் போர் நடத்தப்பட்டது.

இந்த முற்றுகைப் போருக்கு மராட்டிய இளைஞர் காங்கிரசுப் பொதுச்செயலாளர் பி.எம். சவந்த் தலைமை வகித்தார்.

காங்கிரசுக் கட்சி முற்றிலும் தூய்மைப்படுத்தப்படும் வரையில் பூனாவிலிருந்து எந்தக் காங்கிரசுத் தலைவரையும் வெளியே விடுவதில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருப்பதாக முன்னர் தெரிவித்திருந்தனர்.

பூனா இரயில் நிலையத்தில் முற்றுகைப் போருக்கு இலக்கானவர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களை அமைதிப்படுத்த முயன்றார்கள்; அது முடியவில்லை.

பின்னர் தங்கள் பயணத்தை ரத்து செய்துவிட்டுத் தங்கள் இல்லம் திரும்பிவிட்டனர்.

நோய்க்காலக் கடனுதவி

சிண்டிகேட் பாங்கியின் புதிய திட்டம்—பேராசிரியர் துவக்கிவைத்தார்

சென்னை, ஜூலை 25—

நோய்க்காலத்தில் கடனுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்று சிண்டிகேட் பாங்கியில் துவக்கப்படுகிறது.

இதை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் துவக்கி வைத்தார்.

ஒருவர் சிண்டிகேட் பாங்கியில் மாதந்தோறும் ஒழுங்காகப் பத்து ரூபாயோ, அதைப் போன்று பன்மடங்கு (அதாவது ரூ. 20, ரூ. 30, ரூ. 40 என்பது போன்ற) தொகைகளையோ கட்டிவந்தால், மருத்துவச் செலவுகளுக்காகத் தேவைப்படும்போது அவரது கணக்கில் உள்ளதுபோல் இரு மடங்கு தொகை வரை அவருக்குக் கடனுதவி அளிக்கப்படும்; அம்மாதிரி ஓராண்டு முதல் 10 ஆண்டுவரை பாங்கியில் பணம் போட்டு வரலாம்.

இந்தப் புதிய திட்டம் விரைவில் பிரபலமடைந்துவிடும் என்றும், ஒவ்வொரு பாங்கியிலும்—அஞ்சலகங்களிலும் இது மிகச் சாதாரண வழக்கமாகி விடுமென்றும் அமைச்சர் கூறினார்.

இந்தப் புதிய திட்டத்தின்கீழ் முதன்முதலாக அமைச்சர் பணம் செலுத்தினார்; இந்தத் திட்டத்தில் சேர முன்வந்தவர்களுக்கு அவர் 'பாஸ் புத்தக'ங்களை வழங்கினார்.

அச்சுதமேனன் ஆட்சியில் 65,386 பேர் கைது

நிலப்பறி போராட்டம் மேலும் தீவிரமாகுமாம்

திருவனந்தபுரம், ஜூலை 25—

கேரளத்தில் நிலப்பறி போராட்டம், கடந்த இரண்டு மாதங்களாக நடந்து வருகிறது.

இந்தப் போராட்டத்தையொட்டி நேற்று முன்தினம் வரையில் 65,386 பேர் கைதாகியிருக்கின்றனர்.

'மூன்றாவது மாதத்திலிருந்து இந்தப் போராட்டம் தீவிரமாக நடைபெறும்" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உ.பி. சட்டமன்றத்தில் குழப்பம்—கூச்சல்

அவை நடக்க முடியாததால் ஒத்திவைப்பு

இலட்சுமணபுரி, ஜூலை 25—

நில மேம்பாட்டுக் கட்டண விதிப்பு மசோதாவை உத்தரப் பிரதேச சட்டமன்றத்தில் வருவாய்த்துறை அமைச்சர் தாக்கல் செய்யமுடியாதபடி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிடிவாதமாக மறித்ததன் காரணமாகக் கூட்டம் இருமுறை ஒத்திவைக்கப்பட்டது.

உறுப்பினர்கள் போட்ட கூச்சலில் நடவடிக்கைகளை நடத்த முடியாமற்போனதால் அவைத் தலைவர் கூட்டத்தை ஒத்தி வைத்தார்.

சென்னை, ஜூலை 25—

இந்த ஆண்டு புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சுதந்தர வெள்ளி விழாவையொட்டிய இளைஞர் பேரணி ஊர்வலத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 400 மாணவர்களும் — 100 மாணவியரும் பங்கேற்பர்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு மாநில முன்னேற்றமே இன்றியமையாதது

மத்திய திட்டக் குழுவிடம் தமிழகத் திட்டக் குழு வலியுறுத்தல்

மாநில ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ரூ. 2,500 கோடி மதிப்பீடு

சென்னை, ஜூலை 24—

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டின் திட்டங்கள் ரூ. 2 500 கோடி அளவினைக் கொண்டதாக இருக்கும்; இதில் மாநில அரசு செலுத்தும் பங்கு மட்டும் ரூ. 1 200 கோடியாக இருக்கும்.

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு இந்த மதிப்பீட்டினைக் குறிப்பிட்டுள்ளது.

மாநில அரசின் பரிசீலனைக்கு தனது அறிக்கையை விரைவில் திட்டக் குழு தாக்கல் செய்யவிருக்கிறது; அதற்கு முன்பாக இக்குழு பல நிதி வள ஆதாரங்களை மீண்டும் பரிசீலனை செய்துவருகிறது.

மாநிலத்தின் முன்னேற்றத்தில் அதன் பொருளாதார வளர்ச்சியில் அதிகத் தீவிரம் கொண்ட நிலையில் பல திட்டங்களை மாநில அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது; இந்த வகையில் மாநிலத் திட்டக் குழு மாநிலத்திற்கென ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியுள்ளது.

மத்திய அரசின் பங்கு வழக்கமாக மத்திய திட்டக் குழுவால் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டுவரும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசுக்கு 40 முதல் 45 சதவிகிதம் வரையில் மட்டுமே உதவி தருகிறது; எஞ்சிய செலவினங்களை மாநில அரசுகளே மேற்கொள்ளவும் அது கேட்டு வந்துள்ளது; இந்தச் சதவிகித அளவினைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

அத்துடன் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டமும் விரிவுபடுத்தப்பட்டே வந்துள்ளது; இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே மாநிலத் திட்டக் குழு, மாநிலத்திற்கான தனது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்திருக்கிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு துறைகளில் பங்கேற்றுத் திட்டங்களைச் செயல்படுத்த முற்படும் மத்திய அரசு--மாநில அரசுத் துறைகள், கூட்டுறவுத் துறை, பொதுத் துறை--தனியார் துறைகள் அனைத்திற்குமாக ரூ. 2,500 கோடி திட்ட மதிப்பீட்டை மாநிலத் திட்டக் குழு வகுத்துள்ளது.

மாநிலத்திற்கான இந்த 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக மாநில அரசு தனது பங்காக ரூ. 1,200 கோடி செலவிடும்; இதற்கான வரவினங்களையும் மாநிலத் திட்டக் குழு ஆராய்ந்துள்ளது.

மாநிலத்தின் முன்னேற்றத்தைப் பொறுத்தே நாட்டின் முன்னேற்றம் அமைவதால் மாநிலத்தை முன்னேற்றுவிக்கும் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டுமென்று மாநிலத் திட்டக் குழு மத்திய திட்டக் குழுவைக் கேட்டுக்கொண்டுள்ளது; அதே நேரத்தில், கூடுதல் வரவினங்களைக் கண்டறியும் பணியிலும் மாநிலத் திட்டக் குழு தனது இறுதிப் பரிசீலனையை இப்போது நடத்தி வருகிறது.

சென்னைக்கு மற்றொரு பால் பண்ணை

ரூ. 2 கோடி முதலீட்டில் அம்பத்தூரில் அமையும்

நாள்தோறும் 2 இலட்சம் லிட்டர் பால் கிடைக்கும்

சென்னை, ஜூலை 24—

நகரில் நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் வழங்கக் கூடிய நவீன பால் பண்ணைத் தொழில் இன்னும் இரண்டு ஆண்டுகளில் செயல்படும்.

1970-ஆம் ஆண்டு ஆராய்ச்சிப்படி நகரின் அன்றாடப் பால் தேவை 3,64,000 லிட்டர்களாகும்.

இந்தப் பால் பண்ணைத் தொழில் முதலீடு ரூ. 2 கோடி; இப்பண்ணையை அம்பத்தூர் தொழில் பேட்டையில் வைக்கலாமென்றும், இப்பண்ணைக்கென அகல இரயில் பாதை ஏற்படுத்தலாமென்றும் தீவிரமான யோசனை இருந்து வருகிறது. பால் ஏற்றி அனுப்புவதற்கு இரயில் வசதியிருந்தால் சிக்கனமாகவும்--திறமையாகவும் நடத்த இயலும்.

வடக்கு மாவட்டங்களில் அகல இரயில் பாதையோர இடங்களில் 2 அல்லது 3 துணைப் பால் பண்ணைகள் இருக்கும்; உற்பத்தியாளர்களிடமிருந்து இங்கு பால் வாங்கிக் கொள்ளப்படும்; இதைத் தவிர தக்க இடங்களில் குளிர்பதன நிலையங்கள் அமைக்கப்படும்.

புதிய பால் பண்ணைத் தொழில் இயங்கத் தொடங்கியதும், நகரில் பெரிய பால்--பால் பொருள் வியாபாரம் மேற்கொள்ளப்படும்.

சமூகத்திலுள்ள எல்லாப் பிரிவினருக்கும் நியாயமான விலைக்கு நல்ல பால் சப்ளை செய்வதுதான் புதிதாக நிறுவப்படவிருக்கும் பால் பண்ணை வளர்ச்சிக் கார்ப்பரேஷனின் நோக்கமாகும்.

மாதவரம் பால் பண்ணை விரைவில் ஓர் இலட்சம் லிட்டர் குறிக்கோளை எட்டும்; 'புதிய புட்டி லைன்' வந்ததும், இது இயலும்; இப்போது 75,000 லிட்டர் பால் சப்ளை ஆகிறது.

பிரான்சிலிருந்து பால் அடைப்புக் கருவி தருவிப்பதற்கான இறக்குமதி லைசென்சு கோரப்பட்டுள்ளது; இக்கருவியிருந்தால், பிளாஸ்டிக் புட்டிகளில் பாலை அடைப்பதற்கு வசதியாக இருக்கும்; இந்த பிளாஸ்டிக் புட்டியை ஒரு தடவைதான் பயன்படுத்த முடியும்; துரிதமாகப் பால் அடைப்பதற்கும்--வழங்குவதற்கும் இது வசதியாக இருக்கும்.

மத்திய அரசும்--உலக உணவு உதவித் துறையும் வகுத்துள்ள திட்டத்தின் கீழ், பால் பவுடர்--வெண்ணெய் விற்பனை மூலம் ரூ 95 40 கோடி நிதி சேரும்; இதிலிருந்தும் சென்னைப் பால் பண்ணைத் தொழிலுக்கு உணவுப் பெருக்கு நடவடிக்கையின் கீழ் ரூ. 8 87 கோடி கிடைக்கும்; இதில் 30 சதவிகிதம் மானியத் தொகையாகும்.

பால் உற்பத்தியாளருக்கு இக் கார்ப்பரேஷன் பலதரப்பட்ட உதவிகள் செய்யும்; கால்நடை மருத்துவர்கள்--நிபுணர்கள் இருப்பர்; தீவனச் சாகுபடிக்கான உதவி இருக்கும்; 5000 மாடுகளுக்கு ஒரு கால்நடை வைத்தியர் இருப்பார். 250 மாடுகளுக்கு ஒரு கிராம நல ஊழியர் விதம் நியமிக்கப்படுவர்; இவர்கள் இதற்கெனத் தனிப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பர்.

நகரிலுள்ள மாடுகளுக்கு நகருக்கு வெளியில் கவர்ச்சிகரமான வசதிகள் அமைந்த கொட்டில்கள் ஏற்படும்.

நகரில் 1970-ல் நடத்திய பால் பயன்பாட்டு ஆராய்ச்சியிலிருந்து நாளொன்றுக்கு, 3 64,000 லிட்டர் பால் தேவை என்று தெரிய வந்தது.

சத்துணவு வழங்கும் திட்டம்

நடப்பு ஆண்டில் மேலும் விரிவுபடுத்தப்படும்

சென்னை நகரில் மட்டும் 3 இலட்சம் குழந்தைகள் பயனடைவர்

சென்னை, ஜூலை 24—

"குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு மேலும் 3 இலட்சம் குழந்தைகளுக்குச் சென்னை நகரில் மட்டும் சத்துணவு வழங்கத் தமிழக முதலமைச்சர் திட்டமிட்டிருக்கிறார்"

என்று அமைச்சர் க. இராசாராம் அவர்கள், ஆவடியை அடுத்து அமைந்துள்ள 'கேப்ப் தோன் கில்வா' என்ற பொதுநலச் சேவா சங்கத்தினரின் வரவேற்புக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; மேலும் அவர் கூறியதாவது:—

"பல ஆண்டுகளுக்கு முன்பு கனடா நாட்டிலிருந்து இங்கு வந்து, சாதி--மத--மொழி பேத உணர்வுகளுக்கு இடமில்லாமல் ஏழை நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்காகத் தொண்டாற்றி வந்த மறைந்த வாலங் அவர்களுக்கு என் நன்றியையும்--பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்ட நிலையினரின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்குத் தொடக்கத்திலேயே சத்துணவு கிடைக்கும் நிலையில் நம் நாடு இருந்திருக்குமானால், இது போன்ற ஆசிரமங்களில் வந்து--அந்தத் தரத்துக் குழந்தைகள் உடல் பலமில்லாமலும், அறிவு வளர்ச்சி இல்லாமலும் வந்து சிகிச்சை பெறவேண்டிய அவசியம் இருக்காது.

ஐ. நா. அவையினர் ஆராய்ந்து வெளியிட்ட ஒரு தகவலில், 'குழந்தைகள் இரண்டாண்டுக் காலத்திற்குள் சத்து உணவினைப் பெற முடியாது போனால், அதன் எதிர்காலம் இருண்டு விடும்' என்று குறிப்பிட்டிருக்கின்றனர்; அவ்வாறு சொல்லியதோடு மட்டுமன்றி நமது நாட்டிற்கு ரொட்டியும்--பால் மாவும் தந்துதவுகிறார்கள்; அத்திட்டத்தின்படி நமது தமிழக முதல்வர் இவ்வாண்டில் சென்னையில் மட்டும் 3 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்க இருக்கிறார்கள்."

கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம்

பறங்கிப்பேட்டையில் பரிசோதனை

தஞ்சை, ஜூலை 24—

கடல் நீரைக் குடிநீராக மாற்றும் பரிசோதனைத் திட்டம் ஒன்றைத் தென்னாற்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டையில் தமிழ்நாடு குடிநீர்--வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது.

பவநகரிலுள்ள மத்திய உப்பு--கடல் சார்பு இரசாயன ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வாரியத்தின் தலைவர் திரு. செ. கந்தப்பன் இத்தகவலை வெளியிட்டார்.

"இந்தத் திட்டம் வெற்றிகரமாக இருக்குமானால் தமிழ்நாட்டில் பிற இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்" என்றார் அவர்.

நாட்டின் வளத்தில் வேளாண்மைப் பங்கு

புதுடில்லி, ஜூலை 24—

நாட்டின் பொருளாதார வளத்தில் வேளாண்மையின் பங்கு 44 5 சதவிகிதம் ஆகும்.

1970—72-ஆம் ஆண்டில் வேளாண்மையின் மூலம் ரூ. 18 755 கோடி வருமானம் கிடைத்தது.

1970 71-ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களின் உற்பத்தி 1078 இலட்சம் டன் என்னும் புதிய உச்ச நிலையை எட்டியது; இதற்கு முந்தைய ஆண்டில் உணவுப் பொருட்களின் உற்பத்தி 995 இலட்சம் டன் ஆகும்.

கோதுமை--கம்பு--சோளம் ஆகியவை நல்ல விளைச்சல் கண்டுள்ளன.

வெள்ளிக் கிரகத்தில் இரஷ்யக் கோள்

விண்வெளியில் புதிய சாதனை

மாஸ்கோ, ஜூலை 24—

வெள்ளிக் கிரகத்தின் (சுக்கிரனின்) இரகசியங்களை உலகிலேயே இன்று முதன் முதலாக இரஷ்ய விஞ்ஞானிகள் அறிந்தனர்.

தானே இயங்கும் இரஷ்ய ஆராய்ச்சிக் கலம் சுக்கிரனில் பத்திரமாக இறங்கி--அங்கிருந்து செய்திகளை அனுப்பியது.

தகிக்கும் வெப்பத்தில் ஒரு பாறைப் பகுதி மீது இறங்கிய அந்தக் கலம் அனுப்பிய செய்திகளை இரஷ்ய விஞ்ஞானிகள் கேட்டு அறிந்து கொண்டிருந்தார்கள்.

ஆள் இல்லாத இந்தக் கலம், 117 நாட்கள் பயணம் செய்து 30 கோடி கிலோ மீட்டர் (அதாவது 18 கோடி 75 இலட்சம் மைல்) பயணம் செய்து, 'வீனஸ் 8' என்ற இரஷ்ய விண்வெளிக் கோளில் சென்று--அதிலிருந்து பாரச்சூட் மூலம் பத்திரமாக சுக்கிரனில் இறங்கியது.

இதுவரை மனிதன் அனுப்பிய எந்தக் கலமும் வெளிச்சமுள்ள சுக்கிரன் பகுதியில் இறங்கியதில்லை; அதன் பாறை பற்றி இவ்வளவு விரிவான ஆராய்ச்சி இதுவரை கிடைத்ததில்லை; அந்த அளவில் இது, இரஷ்யர்களுக்கு இரட்டிப்பு வெற்றி எனக் கருதப்படுகிறது.

சுக்கிரனில் உள்ள பேரொளி--அதில் உள்ள வாயு அழுத்தம்--வெப்ப அளவு ஆகியவை பற்றி இரஷ்ய ஆய்வுக் கலம் செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்தது; 475 டிகிரி செண்டிகேட் (அதாவது 887 டிகிரி பாரன்ஹீட்) வெப்பத்தில் இந்தச் சோதனை நடைபெற்றது; அதில் உள்ள வாயு அழுத்தம் பூமியில் உள்ளதைப் போன்று 90 மடங்காகும்.

அமெரிக்கா சுக்கிரனுக்கு அனுப்பிய விண்வெளி ஆய்வுக் கலங்கள் இதுவரை அதை மேலே சுற்றி வந்துதான் ஆய்வுகளை அனுப்பின.

ஆதரவற்ற முதியோர்களுக்குத் தங்கும் விடுதிகள்

சென்னை நகரில் அமைக்கத் தேசிய மகளிர் கழகம் ஏற்பாடு

சென்னை, ஜூலை 25—

தேசிய மகளிர் கழகத்தின் தமிழ்நாடு கிளை, தமிழ்நாட்டில் முதியோர் இல்லம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது; இந்தத் திட்டக் குழுவின் தலைவர் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன், நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது:—

'தேசிய மகளிர் கழகம் தமிழ்நாடு கிளையின் சார்பில் சென்னையில் முதியோர் இல்லம் அமைக்க இருக்கிறோம்; இந்த இல்லங்களில் கவனிப்பாரற்றிருக்கும் முதியோர்கள் தங்கித் தங்கள் வாழ்நாளைக் கழிக்கலாம்.

இந்த இல்லத்தை அமைப்பதற்காக அடையாறு கிரீன்வேஸ் சாலையில்--கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை 25 ஆண்டுக் கால குத்தகைக்கு எடுத்திருக்கிறோம்; இதில் 30 இல்லங்கள் அமைக்கப்படும்; ஒவ்வொரு இல்லத்திலும் 2 பேர் தங்க வசதி இருக்கும்; ஒவ்வொரு இல்லமும் ரூ 10,000 செலவில் கட்டப்படும்.

இதில் தங்கக்கூடிய முதியவர்கள் அவர்களாக சமைத்துச் சாப்பிட விரும்பினால் அதற்கான சமையல் அறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்; அப்படி அவர்களாகச் சமையல் செய்துகொள்ள முடியாது என்றால், அவர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்; ஆனால் அவர்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்திவிட்டால் போதும்; அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி--மற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இப்படிப்பட்ட இல்லங்களை அமைத்துத் தருவதற்கு நிதி வசதி படைத்தவர்கள் பலர் முன்வந்திருக்கிறார்கள்; அப்படி முன்வந்திருப்பவர்கள் சிலரைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னையைச் சேர்ந்த திருமதி சத்தார் ஒரு இல்லம் கட்டுவதற்காக ரூ 10,000 நிதி வழங்கியிருக்கிறார்.

மறைந்த முத்துலட்சுமி ரெட்டியின் நினைவாக--அவரது பெயரால் உள்ள அறக்கட்டளையை நிர்வகிப்பவர்கள் ஓர் இல்லம் கட்ட ரூ. 10,000 நிதி வழங்கியிருக்கின்றனர்.

ரங்கய்யா நாயுடு என்பவர் ஓர் இல்லம் கட்ட ரூ. 10,000 நிதி வழங்கியிருக்கிறார்.

சமூக சேவகி கிளப்வாலா ஜாதவ்--அவரது சகோதரியார் கஸ்தூர் ஆகியோர் தங்கள் பெற்றோரின் நினைவாக ஓர் இல்லம் கட்ட ரூ 10,000 நிதி வழங்கியிருக்கின்றனர்.

தொழிலதிபர் கோத்தாரியின் மனைவி தன்னுடைய மாமனார் நினைவாகவும்--தாய், தந்தையர் நினைவாகவும் ஓர் இல்லம் கட்ட ரூ 10,000 நிதி வழங்கியிருக்கிறார்.

இதுபோல நிதியளிக்க வசதி படைத்தவர்கள், அறக்கட்டளைகள்--பணவசதி படைத்தவர்கள் நன்கொடையாளர்கள் முன்வர வேண்டும்; இந்த உயரிய நோக்கத்துக்காக தாராளமாக நிதி வழங்க வேண்டும்.

இந்த முதியோர் இல்லத்தில் திக்கற்றவர்களுக்கும்--கொடிய நோயால் பாதிக்கப்படுபவர்களுக்கும் தனித்தனி இல்லங்கள் அமைக்கப்படும்.

இன்னும் 6 மாதத்தில் இதற்கான கட்டடங்கள் கட்டப்பட்டுவிடும்; தொடக்கத்தில் 60 முதியோருக்கு இந்த இல்லத்தில் நல்வாழ்வு அளிக்கத் திட்டமிட்டிருக்கிறோம்; தொடர்ந்து நிதி வசதிக்கு ஏற்ப அதிகமான இல்லங்களை அமைக்க இருக்கிறோம்."

காஷ்மீர் போர் நிறுத்த எல்லைக் கோடு

ஐ.நா. பார்வையாளர் தேவையா?

பாகிஸ்தான் கோரிக்கையும் இந்தியாவின் பதிலும்

புதுடில்லி, ஜூலை 24—

"காஷ்மீரில் போர் நிறுத்த எல்லைக் கோடு இன்னும் அப்படியே இருக்கிறது; அதை மேற்பார்வையிட ஐ. நா. பார்வையாளர்கள் இன்னும் தேவைப்படுகின்றனர்"

என்று, ஐ. நா.-விடம் பாகிஸ்தான் தெரிவித்திருப்பதாகப் பாகிஸ்தான் வானொலி கூறியது.

டிசம்பர் போருக்குப் பிறகு (பழைய) போர் நிறுத்த எல்லைக் கோடு இல்லாததால், ஐ. நா. பார்வையாளர்களைத் திரும்பப் பெறக் கோரி இந்தியா ஐ. நா.-வுக்கு அனுப்பிய குறிப்பை அடுத்து பாகிஸ்தான் இவ்வாறு கோரியது.

போருக்குப் பிறகும், அந்த எல்லைக் கோடு பெரும்பாலும் அப்படியே இருப்பதாகவும், ஒரு சில இடங்களில்தான் மாறியுள்ளதாகவும் பாகிஸ்தான் வானொலி கூறியது.

"ஐ. நா.-வில் காஷ்மீர் தகராறு இருக்கும் வரையில் பழைய போர் நிறுத்த எல்லைக் கோட்டையும்—அது மாறிய இடங்களிலும் அதை பார்வையாளர்கள் மேற்பார்வையிட வேண்டும்" என வானொலி கூறியது.

சிம்லா ஒப்பந்தப்படி, காஷ்மீர் நீங்கலாக மற்ற இடங்களில் பழைய எல்லைகளுக்கு இந்தியா--பாகிஸ்தான் துருப்புகள் திரும்பவேண்டும்.

புத்தக வங்கி

மத்திய கல்வியமைச்சர் வற்புறுத்தல்

புதுடில்லி, ஜூலை 24—

'சமுதாயத்திலுள்ள ஏழைக் குழந்தைகள் தங்கள் கல்வியைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளப் புத்தக வங்கிகள் அமைத்து அவர்கட்கு உதவுவது முக்கியமாகும்"

என்று தேசியப் புத்தகக் கழகத்தின் மூன்றாவது கூட்டத் தொடரைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மத்தியக் கல்வியமைச்சர் நூருல் ஹாசன் கூறினார்.

"புத்தக வங்கிகள் உருவாக்குவது கட்டாயத் துவக்கக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பெரிதும் துணையாக இருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"பாடம் புத்தகங்கள் நம்முடைய கலாச்சாரப் பண்பாடுகளைப் பிரதிபலிப்பனவாக விளங்க வேண்டும்; முக்கியமாக நல்லொழுக்கம்--தெளிவான விஞ்ஞானத் துறை ஆய்வுகள் சேர்க்கப்படல் அவசியமாகும்" என்றார் அவர்.

கலப்படத்தைத் தடுக்கப் போதிய நடவடிக்கை இல்லை

மத்திய சுகாதார அமைச்சரே ஒப்புக்கொள்கிறார்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்குப் பதில்

புதுச்சேரி, ஜூலை 24—

"உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்யப்படுவது ஒரு சிக்கலான பிரச்சினை; எனவே, இதற்கு மத்திய அரசால் சரிவரத் தீர்வு காண இயலவில்லை; உணவுப் பண்டங்களில் கலப்படத்தைக் கண்டுபிடிக்கத் தற்போது போதிய அளவுக்குச் சோதனைக் கூடங்கள் இல்லையென்பது உண்மைதான்; உணவுப் பொருள் கலப்படக் குற்றங்களைத் தடுக்க மாநிலமட்டத்தில் நடைமுறைப் படுத்தும் குழு எதுவும் தற்போது நிறுவப்படவில்லை என்பதும் உண்மையே; இக்குறைகளையெல்லாம் விரைவில் களைய வேண்டியது அவசியம்"

என்று, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் உமா சங்கர் தீட்சித் சுட்டிக்காட்டிக் கூறினார்.

சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி பற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் குழுக் கூட்டம் புதுச்சேரியில் நடைபெற்றது; மத்திய சுகாதார அமைச்சர் உமா சங்கர் தீட்சித் கூட்டத்தில் பங்கேற்று உறுப்பினர்கட்கு விளக்கம் அளித்தார்.

உணவுப் பண்டங்களில் பெரும் அளவில் கலப்படம் செய்யப்பட்டு வரும் ஊழல் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கவலை தெரிவித்தனர்.

கலப்படம் செய்யும் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இக்குற்றங்களைத் தடுக்க போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

"உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தை அதிகாரிகள் சரிவர நிறைவேற்றுவதில்லை; உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகட்குப் போதிய பயிற்சி அளிக்கப்படுவதில்லை; மாநில மட்டத்தில் கலப்படத் தடுப்புச் சட்ட அமல் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்; உணவுப் பண்டங்களில் செய்யப்படும் கலப்படத்தைக் கண்டுபிடிக்க அதிக அளவில் சோதனைக் கூடங்களை நிறுவ வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த அமைச்சர் உமா சங்கர் தீட்சித், 'தற்போது உணவுப் பண்டக் கலப்படக் குற்றங்கள் சரிவரத் தடுக்கப்படவில்லை' என்பதை ஒப்புக்கொண்டார்.

ஊருக்கும் ஒரு பெரியார் பிறக்க வேண்டும்

கருநாடகச் சட்டமன்றத்தில் பகுத்தறிவுக் குரல்

சாதி ஒழிப்பை வலியுறுத்தி இ. காங்கிரசு உறுப்பினர் பேச்சு

பெங்களூர், ஜூலை 24—

"மைசூர் மாநிலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பெரியார் இராமசாமி அவர்களைப் போன்றவர்கள் பிறக்க வேண்டும்; அதன் மூலம்தான் மக்களிடையே பெரிய அளவில் நல்ல உணர்வை உருவாக்க முடியும்"

என்று கருநாடகச் சட்டமன்றத்தில் இ. காங்கிரசைச் சேர்ந்த வீரானலி சந்திரசேகர் என்பவர் கூறினார்.

"தனிப்பட்ட எவரும் பொது இடங்களில் தங்கள் சாதியைக் குறிப்பிடும் விளம்பரப் பலகைகள் வைக்க அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது"

என்று யோசனை கூறும் அதிகாரத் தொடர்பற்ற தீர்மானம் ஒன்று கருநாடகச் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது; இது தொடர்பில் பேசுகையில்தான் அவர் இவ்வாறு கூறினார்.

"இத்தீர்மானம் நாட்டில் சாதி--சமயம் இல்லாத சமுதாயத்தை உருவாக்க உதவும்"

என்று அத்தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர் குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியதாவது:—

"பெரியார் அவர்கள் பழைய மூடப் பழக்கவழக்கங்களை ஒழிக்கும் பணியில் அயராது பாடுபட்டுவருகிறார்; தமிழ்நாட்டில் தன்னலமற்ற முறையில் பாடுபட்டுவருகிறார்; அவரிடத்தில் மிகவும் உயர்ந்த அளவில் நான் மதிப்பு வைத்திருக்கிறேன்."

மைசூரில் உள்ள பிராச்சல் மடத்தைச் சேர்ந்த மாணவர்களில், குடுமி வைத்துக்கொள்ளாதவர்களுக்கு மடத்தில் சாப்பாடு போட மறுப்பதாகக் குற்றஞ்சாட்டி--அதைச் சந்திரசேகர் கண்டித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு அரசாங்கப் பணி மற்றும் அரசு தொடர்புள்ள பொது அலுவல்கள் ஆகியவற்றில் முப்பது சதவிகிதத்தை அளிக்கும் வகையில் ஒதுக்கீடு செய்யவேண்டும்.

கோவில்களில் அர்ச்சகர்களாகப் பணியாற்ற அனைத்துச் சமூகத்தினருக்கும் இடம் அளிக்கவேண்டும்."

டி. பி. தார்--டி. ஏ. பாய் பதவி ஏற்பு

புதுடில்லி, ஜூலை 24—

துர்க்கா பிரசாத் தார், டான்சே ஆனந்த் பாய் ஆகிய இருவரும் நேற்று மத்திய அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

டி. பி. தார் திட்டத்துறை அமைச்சராகவும், டி. ஏ. பாய் இரயில்வேத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

டி. பி. தார், உளமார உறுதி கூறுவதாகச் சொல்லிப் பதவி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

டி. ஏ. பாய், கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்தார்.

வசதி குறைந்த நிலையிலுள்ள ஆசிரியர்கட்கு நிதியுதவி அதிகப்பு

புதுடில்லி, ஜூலை 24—

தேசிய ஆசிரியர்கள் நல நிறுவனத்தின் பொதுக் குழு, வசதி குறைந்த ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஆண்டு மானியத் தொகைக்கான வருமான வரம்பை ரூ 4 000-த்திலிருந்து ரூ. 6,000 ஆக உயர்த்துவதென தீர்மானித்துள்ளது.

கட்டாய துவக்கக் கல்விக்கு அதிக நிதி வசதி

புதுடில்லியில் அமைச்சர் நாவலர் கோரிக்கை

முதியோர் கல்வித் திட்டம் நிதியுதவியை அதிகரிக்கவும் வற்புறுத்தல்

சென்னை, ஜூலை 24—

டில்லியில் தேசிய முதியோர் கல்விக் குழுக் கூட்டத்தில் கலந்து மாநிலக் கல்வியமைச்சர்கள், 'கட்டாயத் துவக்கக்கல்விக்காக அதிக நிதி ஒதுக்குமாறு கோரினர்' என்று தமிழ்நாடு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"இந்தக் கோரிக்கையில் எல்லா மாநிலங்களும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளன; அவ்வாறு கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதன் மூலம் 8-வது ஸ்டாண்டர்டுவரையிலாவது படிப்பைப் பாதியில் நிறுத்தாமல் தடுக்கமுடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"முதியோர் கல்வி முறித்துப் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன; செப்டம்பரில் புதுடில்லியில் நடக்கும் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இவற்றை விவாதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது" என்றும் அவர் தெரிவித்தார்.

"முதியோர் கல்விக்காக மாநிலங்களுக்குத் தற்போது மத்திய அரசு அளிக்கும் குறைந்த அளவு நிதி போதுமானதாக இல்லை; ஒதுக்கப்பட்ட நிதியை மத்திய அரசு கொடுக்க முன்வந்தால்தான் முதியோர் கல்விப் பிரச்சினையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையமுடியும் என்று கல்வி அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்" என்றும் அவர் தெரிவித்தார்.

கல்வித் திட்டங்கள்பற்றிய ஒருங்கிணைந்த பிரேரணைகளை அனுப்பி வைக்குமாறு மாநிலங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது என்றும், அவ்வாறு பிரேரணைகளை அனுப்புவதன்மூலம் அத்திட்டங்களை இறுதியாக்குவதற்கு முன்னர் திட்டக் குழு பரிசீலனை செய்யமுடியும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளதாகவும் அவர் சொன்னார்.

★★

மதுரை மாவட்ட

தி. மு. கழக 5-வது மாநாடு

1972 ஆகஸ்டு 5, 6 (சனி--ஞாயிறு) ஆகிய நாட்களில்

மதுரை பந்தயத் திடலில்--வி. எஸ். எஸ். மணி பந்தலில் -- நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அரங்கத்தில் நடைபெறும்.

தலைவர்:	திறப்பாளர்:	அண்ணா படத் திறப்பாளர்:
முரசொலி மாறன் எம்.பி.	எஸ். கணேசன் எம்.எல்.ஏ.	பி. கே. மூக்கையா தேவர் எம்.பி.

கழகத் தலைவர் — பொதுச்செயலாளர் — பொருளாளர்--புரட்சிநடிகர்

டாக்டர் கலைஞர் -- டாக்டர் நாவலர் -- எம். ஜி. ஆர்.

மற்றும் அமைச்சர்கள்--நாடாளுமன்ற--சட்டமன்ற--உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள்--கழக முன்னணியினர் கலந்துகொள்வர்

இரு நாட்களுக்கும் சேர்த்துக் கட்டணம்: ரூ. 10; 5; 2. --- --- பெண்களுக்கு ரூ. 1.

4--8--72 அன்று மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

வரவேற்புக் குழுத் தலைவர்:	செயலாளர்கள்:	பொருளாளர்:	தொண்டர் படைத் தலைவர்கள்:
எஸ். முத்து எம்.எல்.சி.	பி. எஸ் மணியம் எம்.எல்.ஏ., கு. திருப்பதி எம்.எல்.ஏ. காவேரி மணியம் எம்.எல்.ஏ.	வெங்கிடசாமி	பொன். முத்துலிங்கம், மு. காதர்சா திருமதி தேவகி பாண்டியன் எம்.சி. ஏ. வி. இராசு பொ. இராமச்சந்திரன்

★★

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் தகவல்

பாட்டாளிகளுக்கு நலம் பயக்கும் மற்றொரு திட்டம்

தொழில் விபத்து இடர் உதவி நிதி ஏற்படுத்தப்படும்

உயர் நீதிமன்றத்தில் வழக்காடத் தொழிற் சங்கங்களுக்கு நிதியுதவி

குற்ருலம், ஜூலை 25—

"கல்லுடைத்தல் -- வெடி வைத்துப் பாறைகளை உடைத்தல் -- கிணறுகள் தோண்டுதல் அல்லது இது போன்ற பிற தொழில்களில் 1923-ஆம் ஆண்டுத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் தீர்ப்பளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தத் தொழிலதிபர்களுக்கு நிதி வசதி இல்லாமலிருந்தாலும் அல்லது வேறெந்தக் காரணத்தினாலேனும் தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தோர் அந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற முடியாமலிருந்தாலும், அப்போது அத்தொழில்களில் வேலை செய்யும்போது காயம் ஏற்பட்டு நிலையாக ஊனமடையும் தொழிலாளர்களுக்கு அல்லது காயமுற்று மரணமடைந்த தொழிலாளர்களைச் சார்ந்தவர்களுக்கு, 'இடருதவி' அளிப்பதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 15,000 என்ற தொடர் மானியத்துடன், 'தொழில் விபத்துக்கள் இடருதவி' என்ற நிதியை ஏற்படுத்துவதற்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

"இத்தகையத் தொழில்களில் அமர்ந்து வேலை செய்யும்போது காயமுற்று மரணமடையும் தொழிலாளர்களுக்கும் -- மரணம் நேராத விபத்துக்களிலும் -- இழப்பீடு வழங்கும் அளவிற்கு நிதி வசதியற்ற சில ஒப்பந்தக்காரர்களிடம் வேலையில் அமர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு இத்திட்டம் பெருந் துணையாக இருக்கும்"

என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், இங்கு நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியத்தின் 64-வது கூட்டத்தைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

தொழிற் சங்கம் வழக்காட அரசு நிதியுதவி

"உயர் நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக, ஒரு 'ரிட்' மனுவுக்கு அல்லது ஒரு 'ரிட்' மேல் முறையீட்டுக்கு ரூ. 150 வீதம் தொழிற் சங்கங்களுக்கு வழக்காடுவதற்கான உதவி அளிப்பதென அரசு முடிவு செய்திருக்கிறது; வழக்காடுவதற்கான உதவிக்கு ஒப்பளிப்பு வழங்கத் தொழிலாளர் நலத் துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது; வழக்காடுவதற்காக வழங்கப்படும் இந்த உதவியைத் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்"

என்றும் அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் தெளிவுற விளக்கிக் கூறினர்; தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

ஒப்பந்தத் தொழிலாளர் வரைவு விதிகள்

ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் -- நீக்குதல்) சட்டத்தின்கீழ் வரைவு விதிகளை அரசு இப்போது வகுத்துள்ளது; இந்த வரைவு விதிகள் உறுதிப்படுத்தப்படும்போது, இச்சட்டம் நமது மாநிலத்தில் செயலுக்கு வரும்.

இந்தப் புதிய சட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன், அதற்குத் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது.

தொழில் உறவு முறைகள்

தொழிலாளர் குறித்த தேசிய ஆணைக் குழுவின் அடிப்படையில் தொழில் உறவு முறையைச் சீரமைப்பதற்கான செயற் குறிப்புக்கள் பற்றி விவாதிப்பதற்காகப் புதுடில்லியில் 1972 மே 22-ல் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாடு ஒன்று நடந்தது; அந்தச் செயற் குறிப்புக்களின் முக்கியக் கூறுகளாவன :—

தொழிற் தகராறுகள் சட்டத்தின் பெயரை, 'தொழில் உறவுகள் சட்டம்' என்று மாற்றியமைத்தல்; தொழில் தகராறுகட்குத் தீர்வு காண்பதற்கான அமைப்பையும் -- நடைமுறையையும் சீரமைத்தல்; நடுவர் தீர்ப்பு -- தொழிற் சங்கங்கட்குச் சான்றளித்தல் போன்ற அலுவல்களைத் தொழில் உறவுகள் ஆணைக் குழுவிடம் ஒப்படைத்தல்; தொழில் தகராறுகளையும் வேலை நிறுத்தங்களையும் தீர்த்து வைப்பதற்கான நடைமுறை; மூன்றில் இரண்டு பங்கு தொழிலாளர்கள் வாக்கெடுப்பு மூலம் வேலைநிறுத்த முடிவுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

தொழிற் சங்கங்கட்கு ஏற்பளிப்பதற்கான நிபந்தனைகள் -- நியாயமற்ற தொழில் பழக்கங்களில் ஈடுபட்டுள்ளவர்களைத் தண்டித்தல் -- இவை அச்செயற் குறிப்புக்களின் முக்கியக் கூறுகள்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்

அம்மாநாட்டில் நான் கீழ்க்கண்ட குறிப்பிட்டேன்; 'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கைக்கு இந்த அரசு ஆதரவு அளிக்கின்றது; இம்மாநிலத்தில் தொழில் வாரியாக அல்லது வகை வாரியாக அமைந்த எந்த ஒரு தொழிற்சங்கத்திற்கும் ஏற்பளிக்கப் பொதுவாக இந்த அரசு விரும்பவில்லை; இருந்தபோதிலும், ஏற்கனவே செயல்பட்டு வந்த பணியாளர்--தொழிலாளர்களுக்கான தனிச் சங்கங்களுக்கு இந்த அரசு தனியாக ஏற்பு அளித்துள்ளது.'

உரிமைகள் அவசியம்

தொடர்புள்ள தனிப்பட்ட எந்தத் தொழிலாளரும் தொழிலாளர் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு உரிமை இருக்கவேண்டும் -- என்ற செயற் குறிப்பையும் நான் ஆதரித்தேன்.

அதிகாரம் பெற்ற அரசு -- என்பதைப் பொறுத்தவரையில், மத்தியத்துறை நிறுவனங்களில் எழும் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் மாநில அரசுகளிடம் நிலைபெறவேண்டுமென்று கருத்துத்தெரிவித்தேன்,

தொழிற்சங்க நடவடிக்கைகள் மேன்மேலும் தொழிலாளர்களிடமே ஒப்படைக்கப்படவேண்டுமென்றும், தொழிலாளர்களுக்குள்ளாகவே தொழிற்சங்கத் தலைமை உருவாவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், தொழிலாளர் யூனியன் நலன் குறித்த தேசிய ஆணைக் குழு செய்த பரிவுரைகளைப் பொறுத்தவரையில், அதிக அளவு இரண்டு தொழிற்சங்கங்களில் வெளியார் ஒருவர் தலைமை வகிக்கலாமென்ற உச்சவரம்பு இருக்கவேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்தேன்."

நாடாளுமன்றத்தில் சிம்லா ஒப்பந்த விவாதம்

புதிதாக 50 மசோதாக்கள் தாக்கல் செய்யப்படுமாம்

புதுடில்லி, ஜூலை 25—

நாடாளுமன்ற மக்களவை – மேலவை ஆகியவற்றின் கூட்டம், ஜூலை 31-ம் நாள் தொடங்குகிறது; செப்டம்பர் 1-ந் தேதிவரை இந்தக் கூட்டம் நீடிக்கும்.

மசோதாக்களை நிறைவேற்றும் பணிக்கே இந்தக் கூட்டத் தொடரின் பெரும் பகுதி ஈடுபடுத்தப்படும்.

இந்தக் கூட்டத் தொடரில் மொத்தம் 61 மசோதாக்கள் (நகல் சட்டங்கள்) நிறைவேற்றப்பட இருக்கின்றன; இவற்றில் 11 மசோதாக்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டவைகளாகும்.

மீதி 50 மசோதாக்கள் புதிதாகத் தாக்கல் செய்யப்படுகின்றன; மன்னர் மானிய ஒழிப்பு மசோதா – கட்சி மாறுவதைத் தடுக்கும் மசோதா -- சிலைகள் முதலான பழங்காலக் கலைப் பொருட்கள் திருட்டுப் போவதைத் தடுக்கும் மசோதா ஆகியவை இவற்றில் முக்கியமானவைகளாகும்.

மெய்ப்பிக்கப்பட்ட கொலைக் குற்றங்களுக்குத் தற்போது மரண தண்டனை விதிக்கப்படுகிறது; இனிமேல் சாதாரணக் கொலைக் குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும் -- சில தனிக் கொலைக் குற்றங்களுக்கு மட்டும் மரண தண்டனை வழங்குவது என்றும் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; இதற்கு வகை செய்யும் சட்டத் திருத்தம் ஒன்றும் இத்தொடரில் கொண்டுவரப்படக்கூடும்.

சிம்லா உடன்பாடுபற்றி விவாதம்

தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கும் -- பாகிஸ்தான் அதிபர் பூட்டோவுக்கும் இடையே நடந்த சிம்லா உச்சக்கட்ட மாநாட்டின் முடிவுகள் பற்றி வெளிவிவகாரத் துறை அமைச்சர் சுவரண் சிங் அறிக்கை ஒன்று தாக்கல் செய்வார்; அதைத் தொடர்ந்து அரசாங்கத் தீர்மானம் ஒன்றின்மீது விவாதம் நடக்கலாம்.

1966-ல் தாஷ்கண்ட் பிரகடனம் பற்றியும், பின்னர் 1971-ல் இந்தியா -- ரஷ்யா நட்புறவு ஒப்பந்தம் பற்றியும் எவ்வாறு விவாதிக்கப்பட்டதோ அதேபோல், அவையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கோரும் அரசாங்கத் தீர்மானத்தின் மூலம் சிம்லா உடன்பாடும் விவாதிக்கப்படலாம்.

சிம்லா உடன்பாட்டுக்குக் குடியரசுத் தலைவர் அங்கீகாரம் அளிப்பதற்குமுன் நாடாளுமன்றம் அதை அங்கீகரிக்க வேண்டும் என்ற அவசியம் அரசியல் சட்டப்படி கிடையாது; சிம்லா உடன்பாடு பற்றி மத்திய அமைச்சரவை விரிவாகப் பரிசீலனை செய்து முடித்தவுடன், அதை அங்கீகரிக்குமாறு குடியரசுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுவார் என்று தோன்றுகிறது; ஆனால், நாடாளுமன்றத்தில் இது பற்றிய விவாதம் முடிவுபெறுகின்ற வரையில் அங்கீகாரம் நிறுத்தி வைக்கப்படுவதும் இயலக்கூடியதே என்று கருதப்படுகிறது.

பத்திரிகைகளின் உடைமையைப் பரவலாக்குவதற்கு வகை செய்யும் ஒரு மசோதா, இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்; '1972-ம் ஆண்டு செய்திப் பத்திரிகைகள் கம்பெனிகள் மசோதா' என்பது அம்மசோதாவின் பெயர்.

இந்திய செம்புக் கார்ப்பரேஷனையும், நிலக்கரிச் சுரங்கங்களையும் கையகப்படுத்துவதற்கு வகைசெய்யும் மசோதாக்களும் கொண்டு வரப்படவிருக்கின்றன.

8 பெரிய நகரங்களில் புறநகர் மேம்பாட்டுத் திட்டம்

ரூ. 20 கோடி செலவில் திட்டம் -- மத்திய அமைச்சர் தகவல்

புதுடில்லி, ஜூலை 24—

8 லட்சம் மக்கள் தொகையுள்ள 11 நகரங்களில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்துக்கு சுமார் 20 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நகரங்களில் உள்ள சேரி பகுதிகளில் மின்சாரம் தண்ணீர் சப்ளை -- கக்கூசு -- சாக்கடை ஆகிய வசதிகளை செய்து தர இத்திட்டம் வழி வகுக்கும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு நகரை எடுத்துக்கொள்ள திட்டக் குழுவை குடியிருப்பு வசதி அமைச்சகம் அணுகியுள்ளது.

இத்தகவலை துணையமைச்சர் குஜ்ரால் தமது அமைச்சகத்துடன் இணைந்த நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் தெரிவித்தார்.

முக்கியமாக கிராமப் பகுதிகளில் உள்ள நிலமற்ற தொழிலாளருக்கு மனைகளை அளித்தல் -- குடியிருப்பு வசதி -- நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திலிருந்து நிதி வசதிகளை மாநிலங்கள் பயன்படுத்துதல் ஆகிய இரு திட்டங்களைச் செயல்படுத்துவதன் அவசியத்தை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

ஜூலை 26 மாலை 5 மணி : காஞ்சிபுரம்—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் கட்டப்பட்டுள்ள ஆய்வாளர் மாளிகைத் திறப்பு விழா; 6 மணி : காஞ்சீபுரம் கூட்டுறவு மத்திய வங்கியில் சுழற் கோப்பை வழங்கு விழா.

ஜூலை 27 காலை 9 மணி : சேலம் ஈசுவரமூர்த்திபாளையம் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும்--பாலம் கட்ட வேண்டிய இடத்தைப் பார்வையிடுதலும்; 9-30 மணி : மங்களபுரம் ஊராட்சி தாண்டா கவுண்டம்பாளையம் உயர்நிலைத் தொட்டித் திறப்பு விழாவும் -- மீங்கல் ஆறு குட்டை கட்டவேண்டிய இடத்தைப் பார்வையிடுதலும்; 10-30 மணி : மெட்டாலா வளைவுப் பாதை அடிக்கல் நாட்டுவிழா; 11-15 மணி : இராசபாளையம் தி.மு.க. கிளைத் துவக்க விழா; மதியம் 12 மணி : முள்ளுக்குறிச்சி அரிசன உணவு விடுதித் திறப்பு விழாவும் -- பாலம் கட்டவேண்டிய இடத்தைப் பார்வையிடுதலும்; மாலை 3-30 மணி : இராசிபுரம் திருவள்ளுவர் அரசினர் கலைக் கல்லூரியில் உணவு விடுதி அடிக்கல் நாட்டு விழா; 4-30 மணி : இராசிபுரம் நகராட்சிப் பள்ளிக் கட்டடத் திறப்பு; 5-30 மணி : இராசிபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளி விஞ்ஞானக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; 6-30 மணி : நாமகிரிப்பேட்டை புதூர் தி.மு.க. கிளைத் துவக்கவிழா; இரவு 8 மணி : வெண்ணந்தூர் -- பொதுக்கூட்டம்.

மதுரை மாநாடு

வளைவு அமைப்போர் கவனத்துக்கு :

"மதுரை மாவட்ட தி. மு. க. 5வது மாநாட்டு ஊர்வலம் வரும் வீதிகள் அனைத்திலும் அலங்கார வளைவுகள் அமைக்கும் கழகத் தோழர்கள், அந்தந்த இடங்களை முன்கூட்டியே மாநாட்டு அலுவலகத்திற்குத் தெரிவித்துப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

'வளைவுகள் அனைத்தும் ஊர்வலம் வரும் பகுதிகளில் இடைஞ்சலின்றி இருப்பதற்காக 18 அடி உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்"

என்று வரவேற்புக் குழுத் தலைவர் திரு. எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

உடுமலை நாராயணனுக்கு நினைவு அஞ்சலி

கோவை, ஜூலை 25—

அண்ணனே – நீங்கள் எங்களைப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டது; எனினும் நீங்கள், எங்களுடன் இருப்பதாகவே உணருகின்றோம்.

எங்கள் பார்வையிலிருந்து மறைந்தாலும் நினது உள்ள உறுதியும் – ஓயா உழைப்பும் எங்கள் நெஞ்சத்தில் என்றும் நிலைப்பதாகுக!

கோவை
26-7-72

—கோவை மாவட்ட
தி.மு.க. தோழர்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, முரசொலி அச்சகத்தில் (24, [illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.